பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 06 வெள்ளிக்கிழமை 20.05.2022 கதிர் 89

## மே 9 வன்முறையில் மேலுமொருவர் சாவு

இம்மாதம் 9 ஆம் திகதி கொழும்பு – கொள்ளுப்பிட்டி பெரஹர மாவத்தை மற்றும் பேரவாவிக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ள நடைபாதையில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்திருந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குளியாப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த ☞2

# ஹரீன், மனுஷ உள்ளிட்ட 9 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்பு

### சுசிலுக்குக் கல்வி, விஜயதாஸவுக்கு நீதி





பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசில் மேலும் 9 பேர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரும் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர்.

☞2

## ‘பல்டி’யடித்த ஹரீன், மனுஷவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட ஹரீன்பெர்ணான்டோமற்றும்மனுஷநாணயக்கார ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரான லக்ஷமன் கிரியெல்ல இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை என ஐக்கிய மக்கள் கட்சி முடிவெடுத்திருந்த நிலையில், கட்சி முடிவை மீறி செயற்பட்டதாலேயே இவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## சு.கவின் தீர்மானத்தைப் புறந்தள்ளி அமைச்சுப் பதவியை ஏற்றார் நிமல்

### சபையில் சீறினார் மைத்திரி



கட்சியின் தீர்மானத்தை மீறியே நிமல் சிறிபால டி சில்வா அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளார் – என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று ☞2

## மரக்கறி விலைகள் சடுதியாக உயர்வு!



மலைநாட்டு மற்றும் கீழ்நாட்டு மரக்கறி வகைகளின் விலைகள் கடந்தமாதத்துடன் ஒப்பிடுகையில் தற்போது 60 சதவீதத்தால் அதிகரித்துள்ளன.

தக்காளி கிலோ ஒன்றின் விலை தற்போது 700 ரூபா வரையில் அதிகரித்துள்ளது என அகில இலங்கை ஒன்றிணைந்த விசேட பொருளாதார மைய ஒன்றியத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பச்சை மிளகாய் கிலோ ஒன்றின் விலை ரூ 650 ரூபா முதல் 700 ரூபா வரை அதிகரித்துள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ‘மே – 9’ வன்முறைக்கு மஹிந்தவே பொறுப்பு

### டிலான் பகிரங்கக் குற்றச்சாட்டு



நாட்டில் மே – 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்துக்கு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பொறுப்புக்கூற வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய பிரதமரின் கீழ் சர்வ கட்சி இடைக்கால அரசு ☞2

### அமரகீர்த்தி எம்.பி. படுகொலை;

## பிரதான சந்தேகநபர்களில் ஒருவர் வசமாக மாட்டினார்

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்களில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பஸ் சாரதியாகப் பணிபுரிந்துவரும் 29 வயதுடைய குறித்த சந்தேகநபரை நிட்டம்புவ பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள படுகொலை செய்யப்பட்டார்.

☞2

## இலங்கைக்கு ஜி - 7 நாடுகள் நேசக்கரம்

இலங்கைக்கான கடன் நிவாரணம் வழங்குவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாக ஜி - 7 நாடுகள் அறிவித்துள்ளன.

இது குறித்து ஜி - 7 நாடுகளின் நிதித் தலைவர்கள் ஜேர்மனியில் இடம்பெற்ற கலந்துரையாடலின் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இதனால் வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொண்ட ☞2




## ‘ஜி 7’ அறிவிப்புக்கு பிரதமர் வரவேற்பு

இலங்கைக்குக் கடன் நிவாரண உதவிகளை வழங்குவதாகஜி-7நாடுகள் அறிவித்துள்ளன. அதனை நான் வரவேற்கிறேன்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சபையில் தெரிவித்தார்.

☞2



## ஹரீன், மனுஷ உள்ளிட்ட 9 பேர் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்களும் இதன்போது அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளனர்.

புதிய அரசில் 24 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்கவுள்ள நிலையில் ஏற்கனவே தினேஷ் குணவர்தன உள்ளிட்ட நான்கு பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளதுடன், இன்று மேலும் 9 பேர் பதவியேற்றுள்ளனர்.

இதன்படி இதுவரையில் 13 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ள நிலையில், இன்னும் 11 பேர் அமைச்சர்களாக பதவியேற்கவுள்ளனர்.

எனினும், நிதி அமைச்சர் இதுவரையில் நியமிக்கப்படவில்லை. நிதி அமைச்சராகப்பிரதமர்ரணில்விக்கிரமசிங்கவே இருப்பார் எனக் கடந்த வாரம் செய்திகள் வெளியாகிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

புதிய அமைச்சர்கள் விவரங்கள் வருமாறு:-

01. நிமல் சிறிபால டி சில்வா – துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்.

02. கலாநிதி சுசில் பிரேமஜயந்த – கல்வி அமைச்சர்.

03. கலாநிதி கெஹலிய ரம்புக்வெல – சுகாதார அமைச்சர்.

04. கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ – நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்த அமைச்சர்.

05. ஹரீன் பெர்னாண்டோ – சுற்றுலா மற்றும் காணி அமைச்சர்.

06. ரமேஷ் பத்திரண – பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்.

07. மனுஷநாணயக்கார – தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்.

08. நளின் பெர்னாண்டோ – வணிகம், வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்.

09. டிரான் அலஸ் – பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்.

## சு.கவின் தீர்மானத்தைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றிய அவர்,

சர்வகட்சி இடைக்கால அரசே எமது யோசனையாக இருந்தது. தேசிய நிறைவேற்று சபையை நிறுவுமாறு கோரியிருந்தோம். ஆனால், தற்போது பழைய ஆட்சிக்கே புத்துயிர் கொடுக்கப்படுகின்றது. இதனால் மக்கள் நம்பிக்கையை இழப்பார்கள்.

அரசுக்கு ஆதரவு வழங்குவது எனவும், அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்திருந்தது. எனினும், அந்தத் தீர்மானத்தை மீறியே எமது கட்சி உறுப்பினர் அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளார் – என்றார்.

## பிரதான சந்தேக ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், இந்தச் சந்தேகநபர் நாடாளுமன்ற உறுப்பினர் கொலைசெய்யப்பட்டதன் பின்னர் குறித்த பகுதியில் இருந்து தலைமறைவாகியிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 'மே - 9' வன்முறைக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைய வேண்டும் என ஏப்ரல் மாதம் முதல் வலியுறுத்தி வந்தேன். சபாநாயகரை நேரில் சந்தித்தும் கோரிக்கை விடுத்தேன். பிரதமர் பதவி விலகாவிட்டால் மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினேன்.

ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. அப்பாவி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இப்படியெல்லாம் நடந்துதான் பிரதமர் பதவி விலகினால், சிலவேளை காலை 9 மணிக்குப் பிரதமர் பதவி விலகி யிருந்தால்கூட வன்முறை வெடித்திருக்காது. எனவே, மஹிந்த ராஜபக்ஷவும் பொறுப்புக்கூற வேண்டும்.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க தெரிவாகியுள்ளார். அவரைக் கடுமையான விமர்சித்தவன் நான். ஆனால், சர்வதேச ஒத்துழைப்பைப் பெறக்கூடிய நபர் அவர். எனவே, அவருக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் – என்றார்.

## 'ஜி 7' அறிவிப்புக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாடுகளின் தொடர்ச்சியான பங்களிப்பு மிகவும் முக்கியமானது எனவும் அவர் மேலும் கூறினார்.

## இலங்கைக்கு ஜி - 7 .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடன் செலுத்துவதை இலங்கை நிறுத்தி வைத்துள்ளது.

இந்நிலையில், இந்தியப் பெருங்கடல் தேசத்துக்கான நீண்டகால தீர்வுகளைக் கண்டறிவதில் உறுதியாக இருப்பதாகவும், சாத்தியமான கடன் திட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஆக்கபூர்வமாக பேச்சு நடத்த வேண்டும் எனவும் ஜி - 7 நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ஜி - 7 என்பது உலகின் ஏழு பெரிய மேம்பட்ட பொருளாதாரங்கள் என்று அழைக்கப்படும் ஒரு அமைப்பாகும், இது உலக வர்த்தகம் மற்றும் சர்வதேச நிதி அமைப்பில் ஆதிக்கம் செலுத்துகின்றது.

கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## மே 9 வன்முறையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

47 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான குறித்த நபர் கடந்த 9ஆம் திகதி ராகமை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர்மேலதிகசிகிச்சைகளுக்காககொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தநிலையில், அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடந்த 16ஆம் திகதி உயிரிழந்தார் என்று பொலிஸ்ஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது.

தலை மற்றும் மார்புப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் உயிரிழந்தார் என்று பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்ய கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசியல் கைதிகளுக்கு அதோ கதிதான்!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவை விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே அவரையும் ஜனாதிபதியையும் தவிர 4 அமைச்சர்கள் இருந்தனர். இப்போது புதிதாக 9 பேர் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இன்றைய நிலையில் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை பதினைந்து.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் கருதி குறைந்த எண்ணிக்கை கொண்ட அமைச்சரவையே இம்முறை நியமிக்கப்படும் என்று ஆரம்பத்தில் கூறப்பட்டது. ஆகக்கூடியது இருபது அமைச்சர்கள் இருப்பார்கள் என்பது அப்போது கருதப்பட்டது. இன்றைய நிலையில் அது இருபத்தியைந்து வரை உயரலாம் என்று இப்போது சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன. இன்னும் பத்துப் பேர் வரை அமைச்சரவைக்குள் சேர்க்கப்பட வாய்ப்புண்டு.

சரியோ, பிழையோ தனி ஓர் உறுப்பினராக அரசுக்குள் உள்நுழைந்து பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு இப்போது அவரது தரப்பு நாடாளுமன்றக் குழு உறுப்பினர்களாக மேலும் இருவரைச் சேர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிட்டியிருக்கிறது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து குத்துக்கரணம் அடித்து அவரது அமைச்சரவையில் சேர்ந்து கொண்டிருக்கும் ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார இனிமேல் அவரது ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற அணியில்தான் இருப்பார்கள் எனக் கருதலாம். ஆகவே ரணில் தம்முடைய நாடாளுமன்ற குழுவின் தனி ஆவர்த்தனத்தை இப்போது – இந்த அமைச்சரவை விரிவாக்கத்தின் மூலம் – தம்முடன் சேர்த்து மூன்றாக உயர்த்திக் கொண்டு விட்டார்.

தமிழர்களைப் பொறுத்தவரை இந்த அமைச்சரவை விரிவாக்கத்தில் கவலைக்குரிய ஒரு விடயம் உண்டு. அது நீதி அமைச்சராக விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டு இருக்கின்றமையாகும். இவர் தமிழர்களைப் பொறுத்தவரை விடயங்களை பௌத்த, சிங்களப் பேரினவாதப் போக்கில் அணுகுபவராகக் கருதப்படுபவர். இதற்கு முன்னர் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆரம்பகாலத்தில் இவரே நீதியமைச்சராக இருந்தார். அக்காலகட்டத்தில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ் விடுதலை அளிக்கின்ற விடயம் முன்நகர முடியாமல் இருந்தமைக்கு இவரே பிரதான சூத்திரதாரி என பலராலும் பேசப்பட்டது. ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ் அரசியல் கைதிகள் விடுதலை பெறும் விடயத்தில் நீதி அமைச்சர் முக்கிய பங்காற்ற வேண்டியவராக இருக்கிறார். அவரது பரிந்துரையே இவ்விடயத்தில் மிக முக்கியமான அம்சமாகக் கருதப்படுகிறது. நல்லாட்சி காலத்தின் ஆரம்பத்தில் தமிழ் அரசியல் கைதிகளை மன்னிப்பின் அடிப்படையில் விடுவிப்பதற்கான முயற்சிகள் நீதி அமைச்சராக இருந்த விஜயதாஸ ராஜபக்ஷவைத் தாண்ட முடியவில்லை என்ற குற்றச்சாட்டு பல தரப்புகளினாலும் முன்வைக்கப்பட்டது.

இப்போதும் கூட, கடைசியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அச்சமயத்தில் நிதியமைச்சராக இருந்த அலி சப்றி மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் ஆகியோரை இவ்விடயத்தில் சேர்ந்து இயங்கி, உரிய பரிந்துரைகளைத் தமக்கு சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இப்போது அரசியல் களமும் சூழலும் மாறிவிட்டன. புதிய நீதி அமைச்சராக மீண்டும் விஜயதாஸ ராஜபக்ஷ வந்திருக்கின்றமை தமிழ் அரசியல் கைதிகளின் மன்னிப்பு விடுதலைக்கு ஆப்பாகவே இருக்கும் என அஞ்ச வேண்டியுள்ளது. எப்போதும் பௌத்த மத பீடங்களுடன் சேர்ந்து, பௌத்த மத தீவிரப் போக்காளராகக் காட்டிக் கொள்ளும் பேரினவாதியான விஜயதாஸ ராஜபக்ஷ விடமிருந்து தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை பரிவோடு அணுகப்படும் என்று எதிர்பார்ப்பது பயனற்றது தான்.

# தமிழர்கள் உள்ளிட்ட இலங்கையர்கள் அமைதியான நாட்டுக்கு தகுதியானவர்கள்

## கனடா பிரதமர் தெரிவிப்பு



தமிழ் மக்கள் உட்பட இலங்கை மக்கள் பாதுகாப்பான, அமைதியான, நிலையான நாடு ஒன்றுக்குத் தகுதியானவர்கள் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆயுதப் போராட்டம் முடிவடைந்து 13 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட கனேடியப் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இந்த துயரத்தின் வலி, அதிர்ச்சி மற்றும் இழப்புடன் தொடர்ந்து வாழும் குடும்பங்கள் மற்றும் அன்புக்குரியவர்களுடன் தனது எண்ணங்கள் இருக்கின்றன என கனடா பிரதமர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஆயுதப் போர் முடிவுக்கு வந்து 13 ஆண்டுகள் நிறைவடைவதை அனுஷ்டிக்கும் இவ்வேளையில், முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட, 26 வருட கால ஆயுதப் போரின் போது, உயிர்நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகிறோம்.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின் காரணமாக மக்கள் தொடர்ந்தும் துன்பங்களை அனுபவித்து வருகின்றமை கவலையளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களின் உரிமை மற்றும் கருத்து சுதந்திரம் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். அத்துடன், வன்முறையில் இருந்து விலகியிருக்குமாறு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் உட்பட இலங்கை மக்கள் பாதுகாப்பான, அமைதியான, நிலையான நாடு ஒன்றுக்குத் தகுதியானவர்கள் என அவர் வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் போரால் பாதிக்கப்பட்டவர்களின் அனுபவங்கள், நிலையான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் அடைவதற்கான தற்போதைய அவசியத்தை நமக்கு நினைவூட்டுகின்றன.

பாதிக்கப்பட்டவர்களுக்கும், உயிர் பிழைத்தவர்களுக்கும் நீதி வழங்கும் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் செயல்முறையை ஸ்தாபிப்பதற்கான தனது அர்ப்பணிப்பை நிறைவேற்றுமாறு இலங்கைக்கு கனடா தொடர்ந்தும் அழைப்பு விடுக்கிறது.

மனித உரிமைக் கடமைகளை நிலைநிறுத்த உறுதியான நடவடிக்கை எடுப்பதற்கும், நாட்டில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிச் செயற்படும் அனைவருக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் கனடா தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கி வருகின்றது' என அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# சிங்கம் போல் வரவேண்டியவரான மஹிந்த பூனை போல் வந்து எலி போல் சென்றார்



## சந்திம வீரக்கொடி கிண்டல்

முப்பது வருட யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சிங்கம் போன்று நாடாளுமன்றத்துக்கு வந்திருக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

எனினும், இன்று பூனை போன்று இரகசியமாக நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்து எலியை போன்று வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் இதனை கூறியுள்ளார். நாடு மதிக்கும் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவை 'வீட்டுக்கு போ' என்று கூறும் நிலைக்கு நாட்டு மக்கள் வந்துள்ளனர் என சந்திம வீரக்கொடி சுட்டிக்காட்டியுள்ளார்.

# சம்பிக்க ரணவக்கவின் கடிதத்தில் 6 அம்சங்களுக்கு ரணில் உடன்பாடு

நாட்டின் முன்னோக்கி செல்லும் பாதை தொடர்பாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவால் முன்வைக்கப்பட்ட கடிதத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துள்ளார்.


நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ள 06 விடயங்களுக்கு தாம் உடன்படுகிறேன் என பிரதமர் தனது கடிதத் தில் குறிப்பிட்டுள்ளார்.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் எதிர்கால நடவடிக்கை தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளார் எனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

2019 ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக வெளிநாட்டு நிபுணர்களின் உதவி தேவைப்பட்டால் ஏற்பாடு செய்ய முடியும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமையால் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஐரோப்பிய நாடுகளில் தேர்தல் முறையை இணைத்துக்கொள்வது தொடர்பில் ஆராய விசேட குழுவொன்றும் நியமிக்கப்படும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண்பதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து அனைத்துக் கட்சிகளைக் கொண்ட தேசியப் பேரவையொன்றை நியமிப்பது இன்றியமையாதது எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யப் படைகள் தாக்குதல்

## 17 ஆயிரம் பேர் வெளியேற்றம்



ரஷ்யாவின் படைகள் கிழக்கு உக்ரைனில் உள்ள நகரங்கள் மீது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ள நிலையில் அங்கிருந்து பொதுமக்கள் முழு வீச்சில் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேர எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் மீது 2 மாதங்களுக்கும் மேலாக ரஷ்யா, ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கீவ், கார்க்கிவ், சுமி உள்ளிட்ட நகரங்கள், ரஷ்ய தாக்குதலில் கான்கிரீட் குவியல்களாக காட்சியளிக்கின்றன.

உக்ரைன் ராணுவத்திற்கு சொந்தமான 100க்கும் மேற்பட்ட கவச வாகனங்களை அழித்திருப்பதாக அந்நாடு கூறியுள்ளது. தொடர்ந்து, டான்பான்ஸ் பிராந்தியத்தின் டொனெட்ஸ்க், லூஹான்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளில் ரஷ்ய படைகள் குண்டு மழை பொழிந்து வருகின்றன. இதையடுத்து அப்பகுதியில் உள்ள மக்களை உக்ரைன் ராணுவம் அவசர அவசரமாக வெளியேற்றி வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 2,000 குழந்தைகள் உள்ளிட்ட 17,000 பேர் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என உக்ரைன் ராணுவம் தெரிவித்துள்ளது. ரஷ்ய படைகளுக்குதக்கபதிலடிஅளித்துவருவதாகவும் உக்ரைன் ராணுவம் கூறியுள்ளது. ஆனால் தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் ஏராளமானஉக்ரைன்வீரர்கள்தங்களிடம்சரணடைந்து வருகின்றனர் என ரஷ்யா கூறியுள்ளது. நேற்று மட்டும் சுமார் 750க்கும் மேற்பட்ட உக்ரைன் வீரர்கள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணடைந்தனர் என ரஷ்யா கூறுகிறது.

## முடிவுக்கு வந்தது மரியுபோல் சண்டை டான்பாஸில் ரஷ்யா குண்டுமழை



மரியுபோலில் சண்டை முடிவுக்கு வந்த நிலையில், கிழக்கு உக்ரைனில் விடியவிடிய ரஷ்யா குண்டுமழை பொழிந்துள்ளது. டான்பாசில் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது. ரஷ்யா - உக்ரைன் இடையேயான 3 மாத போரில், தலைநகர் கீவ், 2வது பெரிய நகரம் கார்கிவ் போன்ற முக்கிய நகரங்களை முதலில் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த ரஷ்யா, பின்னர் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் ஆயுத உதவியால் உக்ரைனின் பதிலடியை சமாளிக்க முடியாமல் பின்வாங்கியது. இந்நிலையில், மரியுபோல் துறைமுக நகரை முழுமையாக ரஷ்யா கைப்பற்றி உள்ளது. இங்குள்ள இரும்பு தொழிற்சாலையில் உள்ள பதுங்கு குழியில் சுமார் ஆயிக்கணக்கான உக்ரைன் வீரர்கள் பதுங்கி, ரஷ்யாபடைகளுக்குஎதிராகசண்டையிட்டு வந்தனர். இறுதியில் 1,000 வீரர்கள் சரணடைந்தனர். இதில் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்து உள்ளனர். இவர்கள் அனைவரும் ரஷ்யா கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் போர் கைதிகளாக செஞ்சிலுவைச் சங்கம் பதிவு செய்துள்ளது. ரஷ்ய கைதிகளை பரிமாற்றி, போர் கைதிகளாக உள்ள வீரர்களை உக்ரைன் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. தற்போது, இரும்பு தொழிற்சாலையும் ரஷ்யாவின் கட்டுப்பாட்டிற்குள் வந்ததால், மரியுபோலில் சண்டை முடிவுக்கு வந்துள்ளது. வழக்கமாக, உக்ரைன்ராணுவம்சார்பில்வெளியிடப்படும் செய்தியில் மரியுபோல் தாக்கு தல் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

கிழக்கு உக்ரைனை கைப்பற்ற மரியுபோல் முக்கிய இடமாக பார்க்கப்பட்டது. தற்போது, அது ரஷ்யா வசமானதால், அடுத்து கிழக்கு உக்ரைனை கைப்பற்றுவதற்காக டான்பாஸ் பிராந்தியத்தில் தாக்குதலை தீவிரப்படுத்தி இருக்கிறது.

பல இடங்களில் ரஷ்யாவின் தாக்குலை உக்ரைன் முறியடித்து உள்ளது. கிழக்கு உக்ரைனின பல நகரங்களில் விடியவிடிய ரஷ்யா குண்டுமழை பொழிந்தது. இதில், 6 பேர் கொல்லப்பட்டனர். 10க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து உள்ளனர்.



## பாமாயில் ஏற்றுமதிக்கு விதித்த தடையை நீக்குவதாக இந்தோனேஷிய அரசு அறிவிப்பு

பாமாயில் ஏற்றுமதிக்கு விதித்த தடையை திங்கட்கிழமை முதல் நீக்குவதாக இந்தோனேஷிய அரசு அறிவித்துள்ளது. பாமாயில் ஏற்றுமதிக்கான தடையை இந்தோனேஷிய அரசு நீக்கியதால் சர்வதேச சந்தையில் விலை குறைய வாய்ப்பு உள்ளது. பாமாயில் விலை 50 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்ந்ததை அடுத்து ஏற்றுமதிக்கு இந்தோனேஷிய அரசு தடை விதித்திருந்தது.

## பிரிட்டன், ஸ்பெயினைத் தொடர்ந்து அமெரிக்காவிலும் குரங்கம்மை

### கனடாவில் இருந்து திரும்பியவருக்கு தொற்று உறுதி



அமெரிக்கா கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மீளாத நிலையில், அந்நாட்டில் குரங்கு வைரஸ் காய்ச்சல் தொற்று உறுதி செய்யப்பட்டு இருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் நகரத்தைச் சேர்ந்த நபர் தனது நண்பர்களை சந்திப்பதற்காக ஏப்ரல் இறுதியில் கனடாவிற்கு சென்று மே மாத தொடக்கத்தில் அமெரிக்கா திரும்பினார். அவருக்கு தொடர் காய்ச்சல், உடலில் கொப்புளங்கள் ஏற்பட்டதை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மிக அரியவகை வைரஸ் தொற்றான குரங்கு வைரஸ் காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர் பல்வேறு இடங்களுக்கு சென்றுள்ளதால் வேறு சிலருக்கும் இந்த நோய் பரவி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இதனையடுத்து குரங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கு அமெரிக்க சுகாதாரத்துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. பிரிட்டன், போத்துக்கல், ஸ்பெயின் நாடுகளில் குரங்கு அம்மைத் தொற்று கண்டறியப்பட்ட நிலையில், அமெரிக்காவிலும் குரங்கம்மை பரவி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த குரங்கு காய்ச்சல், டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸ் குடும்பத்தை சார்ந்தது என்று கூறும் மருத்துவ ஆய்வாளர்கள், கொறித்து உண்ணும் சிறிய வகை விலங்குகள் மூலம் இந்த வைரஸ் மனிதர்களுக்கு பரவுவதாக கூறுகின்றனர். குரங்குக் காய்ச்சல் தீவிரம் ஆகும் போது 10இல் ஒருவருக்கு மரணம் நேரிட வாய்ப்பு உள்ளதாகவும் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

## மரண பயம் காட்டிய கொரோனா 52.55 கோடி மக்கள் பாதிப்பு

### மெல்ல மீளும் உலகம்



உலக அளவில் கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 49.52 கோடி ஆக உயர்ந்துள்ளது. சீனாவின் வுகான் நகரில் 2019ம் ஆண்டு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது கொரோனா வைரஸ் 221 நாடுகள் பிரதேசங்களுக்கு பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்திவருகிறது. கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் வைரஸ் பாதிப்பு அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 52 கோடியே 55 லட்சத்து 31 ஆயிரத்து 201 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 49 கோடியே 52 லட்சத்து 66 ஆயிரத்து 400 பேர் குணமடைந்துள்ளனர்.

ஆனாலும், கொரோனா வைரஸால் உலகம் முழுவதும் இதுவரை 62 லட்சத்து 96 ஆயிரத்து 913 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் ஒரே நாளில் 86,379 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒரே நாளில் தொற்று பாதிப்பால் 200 பேர் உயிரிழந்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பஞ்சாப் காங்கிரஸ் முன்னாள் தலைவர் சித்துவுக்கு சரணடைய அவகாசம் வழங்கப்படவில்லை



சரணடைய சில வாரங்கள் அவகாசம் கேட்டநவ்ஜோத்சிங்சித்துகோரிக்கையை உச்சநீதிமன்றம் நிராகரித்தது. கடந்த 1988ம் ஆண்டு சித்துவும், அவரது நண்பர் ருபிந்தர் சிங் சந்துவும் பஞ்சாப் மாநிலம், பாட்டியாலா, ரென்வாலா கேட் கிராசிங் அருகே சாலையின் நடுவில் தங்கள் காரை நிறுத்தினர். அப்போது காரில் வந்த 65 வயதான குர்னாம் சிங் என்ற நபர் அவர்களை நகரச் சொல்லியதால், சித்துவும், அவரது நண்பரும் குர்னாம் சிங்கை தாக்கினர். இதில், குர்னாம் சிங் உயிரிழந்தார். கடந்த 1999 செப்டெம்பர் 22 அன்று செசன்ஸ் நீதிமன்றம் சித்துவை வழக்கில் இருந்து விடுதலை செய்தது. இதனை எதிர்த்து குர்னாம் சிங் குடும்பத்தினர் பஞ்சாப் மற்றும் அரியானா உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இவ்வழக்கில் கடந்த 2006ம் ஆண்டு, சித்துவிற்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இத்தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் சித்து மேல்முறையீடு செய்தார். இந்த மனு விசாரித்த நீதிமன்றம், சித்துவை விடுதலை செய்து, ரூ. 1,000 அபராதம் விதித்தது. குர்னாம் சிங்கின் குடும்பத்தினர் உச்சநீதி மன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தனர். மனுவில் சித்துவுக்கு சற்றே கடினமான தண்டனையாவது வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஏ.எம். கன்வில்கர்,எஸ்.கே.கவுல் அடங்கிய அமர்வு முன் இந்த மனு விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதிகள் சித்துவுக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதித்தனர். இவ்வழக்கில் 34 ஆண்டுகளுக்கு பின்னர் சித்துவுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இன்று சித்து சார்பில் மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்கி, நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். உடல்நலக் கோளாறு காரணமாக சரணடைவதற்கு 2 வாரங்கள் அவகாசம் கொடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் சித்து கோரினார். இந்த மனுவை விசாரித்து நீதிபதி ஏ.எம்.கான்வில்கர், இதுதொடர்பாக தலைமை நீதிபதி என்விரமணாவை அணுகுமாறு கூறினார். இதனிடையேஓராண்டுசிறைதண்டனைபெற்ற பஞ்சாப் காங்கிரஸ் முன்னாள் தலைவர் சித்து சரணடைய அவகாசம் அளிக்க முடியாது என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தெரிவித்துள்ளார், இதையடுத்து சித்து இன்று பாட்டியாலா நீதிமன்றத்தில் சரண் அடைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உதகையில் 124வது மலர் கண்காட்சியை தொடங்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

### மலர் சிற்பங்களை பார்வையிட்டு ரசித்தார்



உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 124வது மலர் கண்காட்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். பின்னர் காய்கறிகள், பழங்களால் உருவாக்கப்பட்ட சிற்பங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார். கோடை சீசன் கலைக்கட்டியுள்ள நிலையில், மலைகளின் அரசி என்று அழைக்கப்படும் உதகையில் 2 ஆண்டுகளுக்கு பிறகு மலர் கண்காட்சி இன்று தொடங்கியுள்ளது. உதகை அரசு தாவரவியல் பூங்காவில் இன்று தொடங்கிய மலர் கண்காட்சி 5 நாள்களுக்கு நடைபெறுகிறது. சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பல்வேறு வகைகளை கொண்ட 5 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன. இதில் உதகை நகரம் தோன்றி 200 வருடங்கள் ஆனதை குறிக்கும் வகையில், 200 என்ற வாசகம் பூக்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இம்முறை 124வது மலர் காட்சியை முன்னிட்டு பல வண்ணங்களை கொண்ட ஒரு லட்சம் கார்னேசன் மலர்களை கொண்டு கோவை வேளாண் பல்கலைக்கழக கட்டடத்தின் முகப்பு தோற்றம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக, பெங்களூர், ஓசூர் போன்ற பகுதிகளில் இருந்து கார்னேசன் மலர்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடியினர்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் வகையில், 6 பழங்குடியின மக்களின் உருவங்கள் கொய் மலர்களைகொண்டுஅலங்கரிக்கப்பட்டுள்ளது. பல ஆயிரம் கொய் மலர்களை கொண்டு 10 அலங்கார வளைவுகள் உட்பட பல்வேறு மலர் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

## ஒவ்வொரு மாநிலத்தின் மொழியும் இந்தியாவின் அடையாளம் தான்

### பா.ஜ.க. தேசிய நிர்வாகிகள் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேச்சு



ஒவ்வொரு மாநிலத்தின் மொழியும் இந்தியாவின் அடையாளம் தான் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருக்கிறார். ராஜஸ்தானில் நடைபெற்று வரும் பா.ஜ.க. தேசிய நிர்வாகிகள் கூட்டத்தில் காணொலி வாயிலாக பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது பேசிய அவர், உலகமே இன்று இந்தியாவை பெரும் எதிர்பார்ப்புடன் பார்க்கிறது நம் நாட்டு மக்கள் பா.ஜ.கவை மிகுந்த நம்பிக்கையுடன் பார்க்கின்றனர். இந்தியாவின் வளமான எதிர்காலக் குறியீட்டை எழுதத் துடிக்கும் ஒவ்வொரு இளைஞரையும் பா.ஜ.வுடன் இணைக்க வேண்டும்.

குடும்ப அரசியலால் வஞ்சிக்கப்பட்ட இளைஞர்களின் நம்பிக்கையை பா.ஜ.கவால் மட்டுமே மீட்டெடுக்க முடியும் என கூறினார். தொடர்ந்து பேசிய பிரதமர், மாநில மொழிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை என தெரிவித்தார். கடந்த சில நாள்களாக மொழி அடிப்படையில் சர்ச்சையை கிளப்ப முயற்சி நடக்கிறது. இந்திய கலாச்சாரத்தின் பிரதிபலிப்பை பா.ஜ.க.ஒவ்வொரு பிராந்திய மொழியிலும் காண்கிறது என கூறினார். இந்தி திணிப்பு பற்றி சர்ச்சை நிலவி வரும் நிலையில் பேசிய பிரதமர் மோடி இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

## ரயில்வேயில் வேலை வாங்கித் தருகிறேன் என மோசடி

## பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவுக்கு தொடர்புடைய 15 இடங்களில் சி.பி.ஐ. அதிரடி சோதனை



ஊழல் வழக்கு தொடர்பாக பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவுக்கு தொடர்புடைய இடங்களில் சி.பி.ஐ .அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். லாலு பிரசாத் யாதவ், அவரது மகன் மீது சமீபத்தில் தொடரப்பட்ட ஊழல் வழக்கு தொடர்பாக சோதனை நடத்தி வருகின்றனர். ராஷ்ட்ரிய ஜனதா தள நிறுவனரான லாலு பிரசாத் யாதவ் மற்றும் அவரது மகள் மிசா பாரதிக்கு தொடர்புடைய 15 இடங்களில் சி.பி.ஐ. சோதனை நடைபெற்று வருகிறது. லாலு பிரசாத் யாதவ் ரயில்வே துறை அமைச்சராக இருந்த போது நடைபெற்ற பணிகளுக்கான தேர்வில் வேலை வாங்கி தருகிறேன் எனக் கூறி முறைகேடு நடந்திருப்பதாக சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்துள்ளது. ரயில்வே வேலைகளை வழங்குவதற்காக லாலு பிரசாத் யாதவ் மற்றும் அவரது குடும்பத்தினர் நிலம் மற்றும் சொத்துக்களை லஞ்சமாக பெற்றனர் என சி.பி.ஐ. குற்றம் சாட்டியுள்ளது.

அதன் அடிப்படையில் தற்போது இந்த சோதனை நடைபெற்று வருகிறது. பீகார் தலைநகர் பாட்னா உள்ளிட்ட இடங்களில் சோதனை நடைபெறுவதாக சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக பாட்னாவில் மட்டும் 4 இடங்களில் சோதனை நடைபெறுகிறது. மாட்டுத்தீவன ஊழல் வழக்குகளை சந்தித்த லாலு பிரசாத் ஏற்கனவே சிறை தண்டனை பெற்றவர் என்பது நினைவு கூரத்தக்கது. இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய சிபிஐ அதிகாரி ஒருவர், லாலு பிரசாத் ரயில்வே அமைச்சராக இருந்தபோது, சில நபர்களுக்கு வேலை வாங்கி தருகிறேன் எனக் கூறி நிலம் கையகப்படுத்தப்பட்டது தொடர்பான புகார் எழுந்துள்ளது. இந்த புகாரின் ஆரம்பகட்ட விசாரணை தற்போது எப்.ஐ.ஆராக மாற்றப்பட்டுள்ளதாக கூறினார்.



# உலக மகளிர் குத்துச்சண்டை போட்டியில் தங்கம் வென்ற நிகாத் ஜரீனுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் வாழ்த்து

உலக மகளிர் குத்துச்சண்டை போட்டியில் தங்கம் வென்ற நிகாத் ஜரீனுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். உலக மகளிர் குத்துச் சண்டை போட்டியில் இந்திய வீராங்கனை நிகாத் ஜரீன் தங்கப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்தார். துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகரில் 12வது மகளிர் குத்துசண்டை சம்பியன்ஷிப் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் பிரிவு 52 கிலோ உடல் எடை பிரிவின் இறுதி போட்டியில் இந்திய வீராங்கனை நிகாத் ஜரீன் தாய்லாந்து வீராங்கனை ஜித் போங்குடன் பலப்பரீட்சை நடத்தினார். தொடக்கம் முதலே எதிராலி மீது அதிரடி தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்திய நிகாத் ஜரீன், 5-0 என்ற கணக்கில் வென்று தங்க பதக்கத்தை தட்டி சென்றார். நிகாத் ஜரீன் தங்கம் வென்றதன் மூலம் உலக சம்பியன் பட்டத்தை கைப்பற்றிய 5வது இந்திய வீராங்கனை என்ற பெருமையை பெற்றுள்ளார். தங்கம் வென்று வரலாற்று சாதனை படைத்த நிகாத் ஜரீனுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. நிகாத் ஜரீன் தங்கம் வென்றதை அறிந்த அவரது பெற்றோர் மற்றும் உறவினர்கள் இனிப்புகளை பகிர்ந்துகொண்டு தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்நிலையில், உலக மகளிர் குத்துச்சண்டை போட்டியில் தங்கம் வென்ற நிகாத் ஜரீனுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். ஜரீனின் வெற்றி அனைத்து இளம் வீராங்கனைகளுக்கு உத்வேகமாக அமையும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டிருக்கிறார்.

# திருமலையிலிருந்து ஆஸி செல்ல முயன்ற சமயத்தில் 19 பேர் கைது



(அப்துல்சலாம் யாசீம்)

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட நிலையில் 19 பேர் கிழக்கு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு திருகோணமலை துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட 19 பேரும் இன்று திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவிருந்தனர்.

புலனாய்வுத்துறையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக நடத்தப்பட்ட ரோந்து நடவடிக்கையில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் கிழக்கு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டனர் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் திருகோணமலை துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டஇந்த 19 பேரும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் சிறுவன் ஒருவனும் பெண்ணொருவரும் அடங்குகின்றனர் எனவும் அவர்களை இன்று திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பிலிருந்து ஆஸி செல்ல முயன்ற 21 பேர் விளக்கமறியலில்!

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த 21 பேரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு கிரான்குளம் – தர்மபுரம் பகுதி கடற்கரையில் இருந்து படகு மூலம் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த 21 பேரையும் காத்தான்குடி பொலிஸார் நேற்று மட்டக்களப்பு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர். இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதே வேளை 24 ஆம் திகதி குற்றப்பத்திரிகையை நீதிமன்றிற்கு சமர்ப்பிக்குமாறு காத்தான்குடி பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## வாகரை, வெலிக்கந்தை எல்லைப் பகுதியில் பொலிஸ் – இராணுவக் கூட்டு வீதித் தடை!



மட்டக்களப்பு – வாகரை, வெலிக்கந்தை எல்லை ரிதிதென்ன பகுதியில் பொலிஸ் – இராணுவக் கூட்டு வீதித் தடை அரண் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அல்கிம்மா நிறுவனம், வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி வர்த்தக சங்கம், வாகரை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.தாஹிர் ஆகியோரின் நிதிப் பங்களிப்பு மூலம் கண்காணிப்பு கமரா பொருத்தப்பட்ட பொலிஸ் இராணுவ கூட்டு வீதித் தடை அரண் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு வெலிக்கந்தை எல்லை பகுதியில் மக்கள் பாதுகாப்பு கருதியும், மாவட்ட எல்லைப் பாதுகாப்பு கருதியும் வீதித் தடை அரண் அமைக்கப்பட்டு சேவைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. மக்கள் நலன் கருதி குடிதண்ணீர் வசதியும் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் 22 இராணுவ கூட்டு வீதித் தடை அரண்கள் அமைக்கப்படவுள்ளன எனவும், இவற்றுக்கான நிதிப் பங்களிப்பு வேலைத் திட்டங்கள் வர்த்தக சங்கத்தினர் மற்றும் பொது அமைப்புக்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டு அரண்கள் அமைக்கும் பணிகள் இடம்பெறவுள்ளன எனவும் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எல்.கே.டபிள்யூ.கமல் சில்வா தெரிவித்தார்.

## பொத்துவிலில் டெங்கைத் தடுக்க 37 பேருக்கு சிவப்பு அறிவித்தல்



பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய வகையில் இடங்களை அசுத்தமாக வைத்திருந்த 37 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் நேற்று தெரிவித்தார். தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தினையொட்டி பொத்துவில் பிரதேசத்தில் நேற்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் விசேட டெங்கொழிப்பு செயலணியினர் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கொழிப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட 07 கிராம சேவகர் பிரிவுகளில் 367 வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட டெங்கொழிப்பு பரிசோதனையின் போதே டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த 37 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டவர்கள் ஒரு வார காலத்திற்குள் குறித்த இடங்களை சுத்தம் செய்ய வேண்டுமெனவும், மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

## குரு குடைச்சாமி சர்வமத பீடத்துக்கு தரிசனம் மேற்கொண்ட மேலைத்தேய நாட்டு அன்பர்கள்

### தமிழ் – இந்து பாரம்பரியத்தில் ஈர்ப்பு







கொழும்பை தலைமையகமாக கொண்டு உலக அளாவிய ரீதியில் ஆன்மீக, மனித நேய சேவைகளை ஆற்றி வருகின்ற ஒரே பக்தி அமைப்பின் செயற்பாட்டாளர்கள் காரைதீவில் உள்ள சிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்துக்கு நேற்று வியாழக்கிழமை மதியமும், இன்று வெள்ளிக்கிழமையும் யாத்திரை மேற்கொண்டு வந்தனர்.

இங்கிலாந்தை சேர்ந்த டானியல், தெற்கு அமெரிக்காவை சேர்ந்த மரியல், யோகி நிஷா ஆகியோர் உள்ளிட்ட அன்பர்கள் குழு குரு குடைச்சாமி சர்வமத பீடத்துக்கு தரிசனம் மேற்கொண்டு இங்கு எழுந்தருளி உள்ள பராசக்தி அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளிலும், அன்னதானத்திலும் பங்கேற்றது.

இவர்களை குரு குடைச்சாமி சர்வமத பீடத்தின் பரிபாலகர் கொடைச்சாமி ஜீவாகரன் சுவாம்ஜி, ரமண யோகி சிவஞானம் ஆகியோர் தமிழ் – இந்து பாரம்பரிய முறைப்படி எதிர்கொண்டு வரவேற்று மலர் மாலைகள், இலை மாலைகள் அணிவித்து ஆசிர்வதித்தார்கள்.

ரெய்க்கி சிகிச்சையாளரான டானியல் இங்கு அடியார்கள் முன்னிலையில் பேசியபோது தெரிவித்தவை வருமாறு

இங்கிலாந்து அடங்கலாக மேற்கு உலக மக்கள் அவசரமான, போலி வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றனர், அன்பு, இரக்கம் போன்ற உயரிய பண்புகளை பற்றி சிந்திக்க இவர்களுக்கு நேரம் இல்லாமல் இருக்கின்றது, உண்மையான அமைதியை அடைய முடியாமல் இருக்கின்றார்கள்.

எனக்கு இப்போது 27 வயது. நான் நன்றாக உழைத்து, வசதியாக வாழ்ந்த நிலையில் எனக்குள் உண்மை கண்டறிய தேடல் ஏற்பட்டது. அதுவே என்னை இலங்கைக்கு கொண்டு வந்து சேர்த்தது. இயற்கையோடு இசைந்த வாழ்க்கை முறையை முன்னெடுக்கின்றேன். சிவநெறியை பின்பற்றுகின்றேன்.

மரக்கறி உணவுகளையே உண்கின்றேன். யோகாசனம், ரெய்க்கி, பிராண சிகிச்சை ஆகியவற்றின் மூலம் என்னையும் வளப்படுத்தி சமூகத்துக்கு என்னால் ஆன சேவைகளையும் மேற்கொள்கின்றேன். எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டும் என்பது எமது பிரார்த்தனை ஆகும்.

குடைச்சாமி ஜீவாகர சுவாமிகள் பேரொளியை போன்றவர். சர்வமத பீடத்துக்கும், ஆலயத்துக்கும் தரிசனம் மேற்கொள்கின்ற வாய்ப்பு எமக்கு கிடைத்திருப்பது உண்மையிலேயே எமது தவ பயனே ஆகும். சர்வமத பீடத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் எம்மால் முடிந்த பங்களிப்புகளை எதிர்காலத்தில் மேற்கொள்வோம்.

# எங்களை பட்டினியாக கிடக்க இந்தியா விடாது

## ஆனந்தசங்கரி நம்பிக்கை



பிரதமர் ரணில் இரண்டு மாதத்தில் பஞ்சம் ஏற்படப் போவதாக சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் எங்களை பட்டினியாக கிடக்க எங்கள் தாய் நாடு இந்தியாவும் எமது சகோதரங்களும் விடாது. எனவே நாங்கள் கேட்காமல் முதல் வருவது இந்தியா தான். பஞ்சம் வராமல் பார்க்க கூடிய மனப்பான்மை இந்தியாவுக்கு இருக்கின்றது என தமிழ் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள உல்லாச விடுதியில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று நாடு மிக மோசமான நிலையில் உள்ளது. கலங்கிய குட்டையில் மீன்பிடிக்கப் போகக் கூடாது. ஒருவருக்கு ஒருவர் வஞ்சகம் தீர்க்கப் போகக்கூடாது யாரா வது நல்ல சிந்தனை தெரிவித்தால் அதனை எல்லோரும் பகிர்ந்து கொள்ளக் கூடிய கடமை இருக்கின்றது. எனவே மக்களுடைய தேவையை உணர்ந்து நாட்டுக்காக நாங்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

நாட்டில் இன்று பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்ற நேரத்தில் அரசியலில் ஓர் ஒற்றுமையை கொண்டுவரக் கூடிய நிலைமையை உருவாக்கியிருக்க வேண்டும். எனவே ரணில் அல்லர் எவர் இந்தப் பதவிக்கு வந்தாலும் அதைதான் தெரிவிப்பேன். இந்த பிரச்சினையைத் தனியாகத் தீர்க்கமுடியாது.

ஜூன் மாதத்தில் உணவு பஞ்சம் ஏற்படப் போவதாக பிரதமர் ரணில் தெரிவிக்கின்றமை அவர் கோணத்தில் சரியாக இருக்கலாம். என்னுடைய கோணத்தில் இருந்து பார்க்கும் போது அது பிழையாகத் தெரிகின்றது எங்களுடைய எல்லா விடயங்களுக்கும் எதிர் பார்ப்பது எங்களுடைய தாய்நாடான இந்தியாவே. எனவே நாங்கள் இந்தியாவுக்குச் சொல்லத் தேவையில்லை. இந்தியா தானாக செய்யக்கூடிய விடயங்களை செய்து வருகின்றது.

தமிழ்த் தலைமைகளுக்கு இராஜதந்திரம் தெரியாது. வாயைக் கொடுத்து பழுதாக்குகின்றனர். எனவே நல்லது கெட்டது இந்தியாவுக்கு தெரியும். மகாத்மாகாந்தி காலத்தில் மாகாத்மா காந்தி இலங்கையும் இந்தியாவும் சண்டை பிடிக்க இயலாது என சொல்லி வைத்து சென்றுள்ளார்.

எனவே அனுபவரீதியாக பார்த்தால் சுனாமி காலத்தில் முதல் முதலில் இந்திய மருத்துவத்துறையினர் உடனடியாக வந்து செயற்பட்டார்கள் இவ்வாறு பல நெருக்கடியான நிலையில் இந்தியா உடன் வந்து உதவி புரிந்துள்ளது. எனவே நாங்கள் கேட்காமல் முதல் வருவது இந்தியா தான். ஆகவே இரண்டு மாதத்தில் பஞ்சம் ஏற்படப் போவதாக மக்களை பயப்படுத்தாமல் உற்சாகம் ஊட்டவேண்டும்.

ஊடகங்களுக்கு ஒரு புனிதமான கடமை இருக்கின்றது. எது சரியோ அதை மக்களுக்கு தெரியப்படுத்துவது அதன் கடமை. சில ஊடகங்கள் குத்தகைக்கு சிலரை வளர்க்கின்ற மனப்பான்மையைக் கைவிடவேண்டும். ஊடகவியலாளர்களுக்கு ஆண்டவனால் கொடுக்கப்பட்ட வரத்தை அதனை கட்டளையாக ஏற்று இன, மத பேரம் இல்லாமல் நாட்டின் நன்மை கருதி செயற்படவேண்டும்.

தமிழ் விடுதலை கூட்டணி ஆரம்பிக்கும் போது என்ன மனப்பான்மையுடன் கொள்கைகளை கொண்டிருந்ததோ அதே செயற்பாட்டில் எந்த விதமான மாற்றமும் இல்லை. சிலர் தமது சுய நலத்துக் காக திட்டமிட்டு கட்சியை அப்படி கொண்டு வந்துள்ளனர். ஆனால் கட்சி கட்சியாக தான் இருக்கின்றது தலைமை புனிதத்துவமாகவும் இருக்கின்றது எனவே மக்கள் சிந்தித்து பார்க்க வேண்டும்.

கட்சியின் தலைவர் என அண்மை காலமாக சிலர் தங்களை தாங்களாக அறிவித்தனர் இது ஒரு ஜோக், கூட்டி கழித்து பார்த்தால் அவர்கள் உறுப்பினர்கள் கூட இல்லை. 10 பேர் போலி பணவைப்பு பற்றுசீட்டுடன் 2021 ஆண்டு உறுப்பினராக அங்கத்துவம் கேட்டுள்ளனர். சுருக்கமாகச் சொல்லப் போனால் தாங்கள்தான் கூட்டணி என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள் கட்சியை அழிப்பதற்குத் திட்டம் போட்டு செயற்பட்டனர்.

விடுதலைப் புலிகள் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியை திட்டமிட்டு அழித்தமாதிரி நிலைமையை கொண்டு வந்தவர்கள் அதனை மட்டக்களப்பு மறுமலர்ச்சி கழகம் காப்பாற்றி வைத்தது

அந்த நேரத்தில் மறுமலர்ச்சி கழகம் செய்த பணி மறக்க முடியாத பணி. அவர்களது முயற்சியின் படி போயிருந்தால் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆம் திகதி தேர்தல் முடிந்த அன்று நாடு சுதந்திரம் அடைந்த மாதிரி எல்லோரும் சம உரிமையோடு வாழக்கூடிய வாய்ப்பை விடுதலைப் புலிகளின் ஆதரவோடு தீர்வு கண்டிருக்கும். ஆனால் துரதிஷ்டமாக யுத்தம் 6 ஆண்டு தொடர்ந்தது.

அந்த 6 ஆண்டு எத்தனையோ அனர்த்தங்கள் நடக்கும் போது காப்பாற்ற வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் காப்பாற்றாமல் வாய்திறக்காமல் ஒளித்திருந்ததுடன் அரைவாசிபேர் வெளிநாட்டில் இருந்தார்கள்.

அப்போது நான் வன்னியில் 3 லட்சம் மக்கள் இருக்கின்றனர் என ஜனாதிபதி மஹிந்தவிடம் தெரிவித்தேன் . அப்போது அவர் சத்தம் போட்டு கத்தினார் உனக்கு யார் சொன்னது என்று. பின்னர் நான் சொல்லித்தான் அங்கு 3 லட்சம் மக்கள் இருக்கின்றனர் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் தெரிவித்தார்.

எனவே இந்த 3 லட்சம் பேரின் உயிரை காப்பாற்றி இருக்க முடியும். அந்த யுத்த காலத்தில் இந்தியாவில் 22 பேர் தீக்குளித்தனர்.

ஆனால் எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூட இராஜினாமா செய்ததில்லை. இந்த 3 லட்சம் உயிருக்கும் மானிடஜாதிகள் பெறுப்பேற்க வேண்டும்.

நான் எழுதிய 6 கடிதத்தில் ஒன்றை யாவது படித்திருந்தால் இது நடந்திருக்காது துரதிஷ்டவசமாக கட்சிக்கு கட்சி ஊட கத்துக்கு ஊடகம் ஓர் இணைப்பு இல்லாதது எல்லோரும் கும்பலில் கோவிந்தா என்று இப்போ அரோகரா என்று சொல்லிக் கொண்டிருக்கின்றோம்.

# ஜனாதிபதி பதவிவிலக இருக்கும் நிலையில் ரணில் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு




மக்களின் எதிர்ப்பால் ஜனாதிபதி பதவி விலகவேண்டிய இக்கட்டான நிலையிலே ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இரண்டாவது நாளாக இடம்பெற்ற கடந்த 9ஆம் திகதி கலவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திறமையானவர். அனுபவமிக்கவர். அவரின் திறமையை மதிக்கின்றோம். ஆனால் மக்களின் கோரிக்கை என்ன? கோட்டாபாய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கம் வீட்டுக்கு செல்லவேண்டும் என்றே தெரிவித்து வந்தனர்.

காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த மக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்ததால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்கு செல்வதைத் தவிர வேறு வழியில்லாத நிலையிலே ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

அத்துடன் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டு 13 வருடங்கள் ஆகின்றன. விடுதலைப்புலிகளின் தேவையை தமிழ் மக்கள் அன்றுவிட தற்போதுதான் அதிகம் உணர்கின்றனர்.

அரசாங்கத்தின் செயற்பாடே இதற்கு காரணமாகும். நாட்டில் இடம்பெற்ற கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் எவரும்கவலைப்படுவதாகத்தெரிவதில்லை.

அரசாங்கத்தின் காலவலரான சிங்கள மக்கள் ஒருபடி இறங்கி வடக்கு மக்களுடன் கலந்துரையாட வேண்டும்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானால் மாற்றம் இடம்பெறும் எனத் தெரிவித்தார்கள். ஆனால் அவ்வாறான மாற்றம் ஏற்படப்போவதில்லை என்றே நாங்கள் தெரிவித்தோம்.

எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரம் தொடர்பாக மாத்திரமல்லாது அரசியல் தீர்வு தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசாங்கம் தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவை இழந்திருக்கின்றது. முஸ்லிம் மக்கள் அரசாங்கத்தின் பின்னால் இருந்தனர். தற்போது எதிராக இருக்கின்றனர். இதேபோன்று தற்போது சிங்கள மக்களும் உங்களுக்கு எதிராக இருக்கின்றனர். அதனால் ஜனநாயக முறையில் செயற்பட முயற்சிக்கவேண்டும்.







# வெசாக்கை முன்னிட்டு இராணுவத்தால் யாழில் உலருணவுப் பொதிகள் வழங்கல்

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்டத்தில் இராணுவத்தினரால் வறிய குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

51ஆவது இராணுவ படைப்பிரிவின் ஏற்பாட்டில் 1,500 பேருக்கு உலருணவு பொதிகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் முதற்கட்டமாக நேற்று காலை 10 மணியளவில் ஆரியகுளம் நாக விகாரையில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் 100 பேருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இதனை 51 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் நாக விகாராதிபதி உட்பட இராணுவ அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.05.2022இல் வெளியிடப்பெற்றது.